# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.

**S.C. No.73/2023**

**PW5**

| | | |
|---|---|---|
| Name | : | சரவணராஜா |
| Father's Name | : | பாடலி |
| Village | : | சேத்துப்பட்டு |
| Taluk/District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 17.07.2025.

Accused present.

**முதல் விசாரணை**

நான் சேத்துப்பட்டில் குடியிருந்து சென்னையில் கல்லூரி படித்து வருகிறேன் . இறந்துபோன ராஜகோபால் என் தாத்தா . கடந்த 18.09.2022 அன்று மதியம் 3 - 3.30 மணி அளவில் என் அப்பா பாடலிபோன் செய்து மூர்த்தி என்பவர் என் தாத்தாவை தாக்கி விட்டதாகவும் , அவரை சேத்துப்பட்டு அரசு மருத்துவமனையில் அனுமதித்தோம். பின்னர் மேல் சிகிச்சைக்கு சென்னை செட்டிநாடு குளோபல் தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் . அவர் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்தபோது நானும் , என் அண்ணனும் என் தாத்தாவை பார்த்துக் கொண்டோம். என் அம்மாவும் அப்பாவும் சேத்துப்பட்டு காவல் நிலையத்திற்கு சென்று புகார்கொடுத்தார்கள் . 03.10.2022 அன்று என் தாத்தாவை மதியம் 2 மணியளவில் சென்னை ராஜிவ்காந்தி மருத்துவமனைக்கு அழைத்துசெல்ல சொன்னார்கள். நாங்கள் அவரை ராஜிவ்காந்தி மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றோம் . ஆனால் அவர் சிகிச்சை பலனின்றி 04.10.2022 அன்று மதியம் இறந்துவிட்டார். பின்னர் என் தாத்தாவின் பிரேதத்தை மருத்துவமனையின்

சவக்கிடங்கில் இருந்தபோது போலிசார் என்னையும் என் அண்ணனையும் விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு வழக்கறிஞர் இந்த சாட்சியை பகுதியாக பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டி , அனுமதிக்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசாரின் விசாரணையில் கடந்த 05.10.2022 அன்று சென்னை ராஜிவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் எனது தாத்தா ராஜ கோபாலின் உடலின் மீது காவல் ஆய்வாளர் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்ததாகவும் அப்போது உடன் இருந்ததாகவும் சொல்லிவிட்டு தற்போது சாட்சியத்தை மாற்றி கூறுகிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.